R 5396

# "உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறது"

# "WHERE YOUR TREASURE IS"

**ஆதார வசனங்கள் : லூக்கா 12:13–34.**

**திறவுகோல் வசனம்** : "உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" – லூக்கா 12:34

இயேசு பெருந்திரளான யூதர்களால் சூழப்பட்டவராக இருந்தார். அவர்களில் ஒருவன், அவர் செல்வாக்குள்ளவர் என்று அறிந்துகொண்டு, தன் குடும்ப சொத்தில் ஒரு பாகம் தரும்படி தன் சகோதரனுக்கு அவர் புத்திமதி கூறவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தான். இயேசு அதை மறுத்துவிட்டு, தாம் ஒரு நீதிபதியோ அல்லது பங்கிடுபவரோ அல்ல என்று கூறுகிறார். இயேசுவின் பின்னடியார்கள் இந்த விஷயத்திலும், அதேபோல மற்றெல்லாவற்றிலும் தங்கள் போதகரை பின்பற்றுவார்களானால், அது நலமானதாக இருக்கும். அநேகர் பிறரது காரியங்களில் தலையிடுபவர்களாக இருந்து, கர்த்தருக்கான தங்கள் பணி, சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே என்ற உண்மையை கவனியாது போகிறார்கள்.

சமூகம் சில குறிப்பிட்ட சட்டங்களை, விதிகளை, ஒழுங்குமுறைகளை ஏற்படுத்தியிருக்கிறது. "உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது". இந்த சட்டங்களில் நம்மோடு இசைந்திருக்காத எதுவாயினும் அதை நாம் விட்டுவிடவேண்டும். நாம் பெற்றிருக்கிறவைகளைக் கொண்டு திருப்தியடையவேண்டும். அப்படிப்பட்டவைகள் தெய்வீக ஏற்பாடு நமக்கு உறுதிப்படுத்தினவைகளாக இருக்கும். இயேசு தாம்செய்வதற்கு வேறொரு பணியை உடையவராயிருந்ததுபோல, அவருடைய பின்னடியார்களும் பெற்றுள்ளனர். மகிமை நிறைந்த மேசியாவின் இராஜ்ஜியத்திற்கு ஆயத்தப்படுத்துதலாக அந்த வேறொரு பணி இருக்கிறது. நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ள ஐஸ்வரியங்கள் இந்த பூமியில் ஐஸ்வரியங்களாகக் காணப்படுகிறவைகளைக்காட்டிலும், மிகவும் எல்லைகடந்து மேம்பட்டதாக இருக்கிறது. பரிசுத்த பவுல் சொல்வதைப்போல், இந்த பூமிக்குரிய ஐஸ்வரியங்கள் நம்முடைய கர்த்தர் வாக்களித்திருக்கிற ஆசீர்வாதமான காரியங்களுடன் ஒப்பிட தகுதியற்றதாக, குப்பையும் தூசியுமாக இருக்கிறது.

இயேசு தலையிட மறுத்ததற்கான பின்னணியில், பொருளாசைக்கு எதிரான ஒரு எச்சரிக்கை இருந்தது. இது, அந்த சொத்து முறையாக அவன் சகோதரனுடையது என்றும், இயேசுவிடம் முறையிட்ட அந்த மனுஷன் சட்டப்படியான தன் உரிமையைவிட அதிகமாக ஆசைப்பட்டான் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. அவன் சட்டப்படி மற்றவருக்கு சொந்தமானவற்றின்மீது பேராசை கொண்டவனாக இருந்தான். பூமிக்குரிய உடைமைகள், செல்வம் ஆகியவற்றின் பெருக்கம் வாழ்க்கையின் மொத்தத் தொகையாகாது என அவனும், நாம் அனைவரும் பார்க்க இயேசு விரும்புகிறார். ஒரு மனிதன் செல்வத்தில் புரண்டாலும் துயரமடைந்தவனாக இருக்கலாம், அல்லது அவன் ஏழ்மை நிலைக்கொப்பாக இருந்தாலும் சந்தோஷமாக இருக்கலாம். மகிழ்ச்சியின் அடிப்படை என்பது தேவனுடனான ஆத்தும உறவினாலும், அவரிடத்தில் வைத்துள்ள நம்பிக்கையினாலும் அளவிடப்படுகிறது.

சுவிசேஷ யுகத்தின் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களோடு ஒப்பிடுகையில், யூதர்கள் நிழலான ஜனங்களாக மாம்ச இஸ்ரயேலர்களாக இருக்கிறார்கள். மாம்ச இஸ்ரயேலருக்கான தேவனுடைய வாக்குத்தத்தமானது, அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தால், ஆபிரகாமோடு ஏற்படுத்திய வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக்கொள்ளலாம், மேலும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் உலகத்தை ஆசீர்வதிப்பவர்களாக அவரால் பயன்படுத்தப்படலாம் என்பதாக இருந்தது. அவர்கள் மீதமுள்ள மனிதர்களைப்போல பாவிகளாக இருந்ததினால் அவர்கள் தெய்வீகத் தேவைகளை கடைப்பிடிப்பதற்கு இயலாதிருந்ததே அவர்களின் கடினமாயிருந்தது. இதனால் தேவனுடைய இராஜ்ஜியமாக, அவருடைய ஆசீர்வாதங்களை தேசங்களுக்கு பரவச்செய்ய அவரால் பயன்படுத்துவதற்கு தகுதியற்றவர்களாக இருந்தனர். இருந்தாலும், இராஜ்ஜியத்தைப் பற்றிய நம்பிக்கை அவர்களின் மனங்களில் எப்போதும் மேலான காரியமாக இருந்து, அவர்கள் அனைவராலும் தேடப்பட்டது.

"எல்லோரையும் மீட்கும்பொருளாக"**(1தீமோத்2:6)** தம்மையே கொடுப்பதற்கும், மேசியாவின் இராஜ்ஜியத்தில் அவருடைய உடனாளிகளைக் கட்டமைப்பதற்காக "உத்தம இஸ்ரயேலர்களை" அழைக்கவும், தம்மிடத்தில் கூட்டிச்சேர்க்கவுமான வேலையைத் துவங்குவதற்கும் இயேசு உலகத்திற்கு வந்தார். அவரால் நியாயப்பிரமாணத்தை பூரணமாகக் கடைப்பிடிக்க முடியும், அதை அவர் செய்தார். கூடுதலாக ஆதாமிற்காகவும் அவன் சந்ததிக்காகவும் தமது ஜீவியத்தை பலியாகக் கொடுத்தார். இந்த பலி, மாய்மாலமற்ற "உத்தம இஸ்ரயேலர்கள்" எல்லாருடைய உள்நோக்கமற்ற குற்றங்களுக்கான நன்மையை உருவாக்க அவருக்கு அனுமதி அளித்தது. அவரிடத்தில் எந்த கபடமும் இல்லை. அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க முடியாததாகையால் இராஜ்ஜியத்தை அடையமுடியாது என்றபோதிலும், அவர்கள் நியாயப்பிரமாணத்தின் நீதியை

உடையவராகிய கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதன்மூலம் அது அவர்களுக்கு வழங்கப்பட்டு, இவ்வாறு தேவனால் ஏற்றுக்கொள்ளப்படமுடியும். அந்த இராஜ்ஜியத்தை கட்டமைப்பதற்கு தகுதியுடையவர்களாக தங்களை தேவன் அங்கீகரிக்க பல நூற்றாண்டுகளாக பெருமுயற்சி செய்துகொண்டிருந்த ஜனங்களுக்கு, இதுமுதற்கொண்டு இயேசுவின் போதனைகள் முழுவதும் இராஜ்ஜியத்தினைக் குறித்ததாகவே இருந்தது. இராஜ்ஜிய வகுப்பாரில் அங்கத்தினராவதற்கான முதல் வாய்ப்பு யூத ஜனங்களுக்கு வழங்கப்பட்டது, அந்த தயவை அவர்கள் புறக்கணித்த விகிதாச்சாரத்துக்கு ஏற்பவே, அது அவர்களையும் தாண்டி புறஜாதிகளுக்குச் சென்றது. முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது, ஆனால் நீங்களோ தேவனுடைய கிருபையை உதறித் தள்ளிவிட்டீர்கள்.... இதோ நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்''. என்று சிலரிடத்தில் பரிசுத்த பவுல் சொன்னதுபோல இருக்கிறது(அப்13:46). இந்த உண்மைகளின் கண்ணோட்டத்திலிருந்து இயேசுவின் போதனைகள் உலகத்துக்காக கொடுக்கப்படாமல், மாறாக, இந்த உலகத்திலிருந்து தங்களைப் பிரித்துக் கொண்டவர்களாக உரிமை கோருகிற ஜனங்களுக்கும், மேசியாவின் இராஜ்ஜியத்தில் உடன் சுதந்திரராக ஆவதற்கு விரும்புகிற அல்லது தேடுகிற ஜனங்களுக்கே முகவரியிடப்பட்டுள்ளது.

உண்மையில், புதிய ஏற்பாட்டின் மொத்த போதனைகளும் அப்படிப்பட்டவர்களுக்காகவே இருக்கிறது. அவர்கள் மாத்திரமே கேட்கிற காதுடையவர்களாக இருக்கிறார்கள்; ''காதுள்ளவன் எவனும் கேட்கக்கடவன்'' என்று நாம் அறிவுறுத்தப்பட்டுள்ளோம். மீண்டுமாக, இராஜ்ஜியத்தின் சுவிசேஷமானது, சாந்தமுள்ள, தாழ்மையுள்ள, நொருங்குண்ட இருதயமுள்ளவர்களுக்கே பிரசங்கிக்கப்படுகிறது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளோம். இவர்கள் மாத்திரமே வார்த்தையின் செய்தியை, எந்த வகையிலும் பெற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறார்கள். மற்ற அனைவரும் இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்திற்கு குருடர்களும் செவிடர்களுமாயிருக்கிறார்கள். தற்போது கேட்காத அல்லது பார்க்காதவர்களின் கண்களும் செவிகளும் மேசியாவின் ஆளுகையின்போது படிப்படியாக திறக்கப்படும். ஏனெனில் அவர் ஒவ்வொருவருக்குமாக மரணத்தை ருசிபார்த்தார். ஆனால் அப்படிப்பட்டவர்கள் சுவிசேஷயுகத்தின் மகிமைநிறைந்த பரமஅழைப்பைக் குறித்த விஷயத்தில், இராஜ்ஜியத்தைக் குறித்து முழுவதுமாக தோல்வியடைந்தவர்களாக இருப்பர்.

## **''ஆத்துமாவே, நீ இளைப்பாறு''**

நம் கர்த்தர், பூமிக்குரிய எல்லா குறிக்கோள்களை ஒப்பிட்டுக் காண்பித்து, அதன் முட்டாள்தனத்தை விளக்குவதற்காக ஒரு உவமையை எடுத்துக்காட்டாக தருகிறார். இது உலகக் குறிக்கோள்கள் மோசமானவை என்று அர்த்தப்படுத்துவதில்லை, மாறாக அவைகள் ஒரே மாபெரும் வாய்ப்பாகிய இராஜ்ஜியத்தின் மாபெரும் வாய்ப்போடு ஒப்பிடுகையில், மிகவும் ஏழ்மை நிலையுடையவை. இது விலையேறப்பெற்ற முத்தாக இருக்கிறது. அதை அதை அடைவதற்கு மற்ற எல்லா முத்துக்களை.. அதாவது, மற்ற எல்லா மதிப்புள்ளவைகளை, எல்லா குறிக்கோள்களை, எல்லா நம்பிக்கைகளை ஒதுக்கி வைத்து, அவைகளை குப்பையாக எண்ண வேண்டும்.

அந்த உவமை, தன் ஆஸ்திகளை நன்மை செய்வதில் பயன்படுத்துவதற்குப் பதிலாக, பேராசையுடன் கஞ்சத்தனமாய், தன் ஆஸ்தி பெருகுகிறதில் பிரியப்படுகிற ஒரு ஐஸ்வரியமுள்ள விவசாயியைப் பற்றிப் பேசுகிறது. அவன் மிகப்பெரிய களஞ்சியங்களையும் பண்டகசாலைகளையும் கட்டி; ''அநேக பொருட்களை அளவுக்கு அதிகமாகப் பெற்றிருக்கிறேன், இனிமேல் நான் ஓய்வெடுக்கலாம்'' என்ற சிந்தனையுடன் தன்னையே தேற்றிக்கொண்டான். அவன் விரைவிலேயே இறந்துவிட்டதாக அந்த உவமை சொல்கிறது. தன் ஆஸ்தியின் பெருக்கத்தில் அதைப் பயன்படுத்தத் தவறிய நிலையில், அதன்மூலம் அந்த மனிதன், உண்மையில் என்ன பலன் அடைந்தான் என்று நாம் வினவுகிறோம்? அவற்றின்மீது மற்றவர்கள் சண்டையிட்டுக் கொள்வதற்கும், ஓரளவு அதினால் காயப்படுவதற்கு இயலும்படியே அதை விட்டுச்சென்றான். அவன் ஒரு முட்டாள்தனமான ஐஸ்வரியவானாயிருந்தான். இவ்விதமாக தன் ஆஸ்திகளை விட்டுச்செல்வதற்கு பதிலாக, மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்கும், தேவனுடைய மகிமைக்காகவும் அதை ஞானமாய் செலவழிப்பதில் சந்தோஷமடைந்திருக்க வேண்டும். இவ்வாறு தேவனிடத்தில் ஐஸ்வரியவான்களாய் இராதவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அவன் இருந்தான். அவன் தன் பொக்கிஷத்தை சுயத்துக்காக வைத்துக்கொண்டான்.

அநேகர் இந்த உவமையில் இடம்பெறாத விஷயங்களை யோசிக்கின்றனர். அவர்கள் அந்த ஐஸ்வரியவான் நித்திய வேதனைக்கு சென்றான் என்று அனுமானிக்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய வார்த்தைகளில் அப்படி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ''உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்'' என்ற கூற்று, இந்த இராத்திரியில் நீ உன் வாழ்க்கையை இழந்துவிடுவாய் – அதாவது, நீ ஏழ்மையிலேயே மரிப்பாய் என்பதை முக்கியப்படுத்துகிறது. எதிர்காலத்தில் உன்னை ஐஸ்வரியவானாக ஆக்குகிற ஆவிக்குரிய ஐஸ்வரியங்களை இருதயத்திலும், சிந்தையிலும், நற்கிரியைகளிலும் நீ பெற்றிராவிட்டால், பூமிக்குரிய ஐஸ்வரியங்கள் எதிர்காலத்தில் உன் கணக்கில் இடம்பெறாது.

அந்த ஐஸ்வரியவான் தனக்கு குவிந்த ஆஸ்திகளினால் அனுகூலமடைவதற்கு பதிலாக, அவன் எதிர்கால வாழ்க்கைக்கு அது பாதகம் விளைவிக்கிறதாக இருக்கும்.அவன் தன்னுடைய ஆஸ்திகளை தியாகம் செய்வதற்கு பயன்படுத்தியிருக்கலாம். அல்லது அவன் கிறிஸ்துவின் மூலமாக தன் முழு ஜீவியத்தையும் தேவனுக்கு அர்ப்பணித்து, பின்னர் நேரம், தாலந்து, வாய்ப்புக்கள் மற்றும் செல்வத்தை உண்மையாக தேவனுக்கென கையளித்திருக்கலாம். இப்படி அவன் ஒரு குறிப்பிட்ட வீதத்தில் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைத்திருக்கலாம், அதனால் உயிர்த்தெழுதலில் விசுவாசமுள்ள பின்னடியாராக கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவருடைய மகிமையிலும் கனத்திலும் அழியாமையிலும் பங்குபெற்றிருக்கலாம். அதாவது ஆதாமின் சந்ததி அனைவருக்கும் இயேசுவின் மரணத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ள தெய்வீக ஆசீர்வாதங்களை ஆயிரம் வருடத்திற்கு பகிர்ந்தளிக்கும் பொறுப்பை உடைய, அவருடைய இராஜ்ஜிய வகுப்பாரின் அங்கத்தினராக ஆகியிருக்கலாம்.

அந்த ஐஸ்வரியவான் தனக்காக வாய்ப்புக்களை தவறவிட்டுவிட்டான், இருந்தபோதிலும், கிறிஸ்துவின் ஆயிரவருட இராஜ்ஜியத்தின்போது எழுந்துவருவான். பிரேதக்குழியில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு எழுந்துவருவார்கள் என்று நாம் வாசிக்கிறோம். ஆனால் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் அங்கீகாரத்தோடு எழுந்திருப்பதற்கு பதிலாக, தேவனுடைய கண்டனத்திற்காக அவன் எழுந்துவருவான், அவனுடைய உயிர்த்தெழுதலின் வாய்ப்புக்கள், நியாயத்தீர்ப்புக்காக எழுந்திருக்கும் உயிர்த்தெழுதலாக விவரிக்கப்படும்(யோவா5:29 – R.V). அவன் அவமானத்திற்கும் ஏளனத்திற்குமாக எழுந்துவருவான். அது அந்த நேரத்தின் நியாயத்தீர்ப்பின்கீழ், அவன் தனக்கான பாடங்களைக் கற்று சிறந்த குணாதிசயத்தை உருவாக்கும் வரையிலோ அல்லது அப்படி செய்ய மறுத்து, இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படும் வரையிலோ தொடர்கிறதாக இருக்கும்.

### முதலாவது தேவ இராஜ்ஜியத்தைத் தேடுங்கள்

நாம் உலக இராஜ்ஜியங்களுக்கிடையே உற்றுநோக்கி அவைகளில் ஒன்றை அவருடைய இராஜ்ஜியமாக நம்பி கண்டறிய வேண்டும் என்று ஒரு நல்ல போதகர் அர்த்தப்படுத்துவதாக நாம் புரிந்து கொள்ளக்கூடாது. அதற்கு மாறாக, அவருடைய இராஜ்ஜியம் வருங்காலத்துக்குரியது என்று அவர் நமக்கு அறிவிக்கிறார். ‘‘என்னுடைய இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியது அல்ல’’.. அதாவது இந்த ஒழுங்குமுறைக்கு உட்பட்டதல்ல (யோவா18:36). அவருடைய இராஜ்ஜியம் தேவனுடைய இராஜ்ஜியம், ‘‘உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக’’ என்று நாம் ஜெபிக்கிறோம். நாம் அந்த இராஜ்ஜியத்திற்காக நம்பிக்கையுடன் காத்திருந்து நம்மைத் தயார்ப்–படுத்துகிறோம். அதைத் தேடுவது என்பது, ‘‘ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்திரத்தில் பங்கடையும்படி’’ நம்மை உருவாக்கும் காரியங்களை செய்ய நாடுவது என்ற அர்த்தத்தில் உள்ளது. நாம் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்துவைக்க வேண்டும். நம்முடைய இரட்சகரின் இரண்டாம் வருகையின்போது, நம்முடைய இராத்தலையும் தாலந்துகளையும் மிக ஞானமாக பயன்படுத்தவேண்டும். அவர் முதலாவது தம்முடைய ஊழியக்காரர்களை அழைத்து கணக்குப் பார்க்கும்போது, நாம் அவருடைய ஊழியக்காரர்களில் ஒருவராக இருக்க விரும்புவது மட்டுமன்றி, மாறாக, ‘‘நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் அதாவது இராஜ்ஜியத்தின் சந்தோஷத்திற்குள் பிரவேசி’’.. ‘‘இரண்டு பட்டணங்களுக்கு அல்லது 5 பட்டணங்களுக்கு அதிகாரியாயிருப்பாய் என்று அவர் சொல்லும் சத்தத்தைக் கேட்கிறவர்களாகவும் இருக்கவேண்டும்.

இராஜ்ஜியத்தின் சுதந்திரர்களாக இருக்க விரும்புகிறவர்களுக்கு இங்கு ஒரு திட்டவட்டமான செய்முறை இருக்கிறது. (1) அவர்கள் தங்களை பாவிகளாகவும், தெய்வீக கவனத்திற்கு தகுதியற்றவர்கள் என்றும் உணர்ந்துகொள்ளவேண்டும். (2) அவர்கள் இயேசுவை ‘‘உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக’’ அங்கீகரிக்கவேண்டும். (3) அவரது பலி உலகத்தின் மூலாதாரமான சுத்திகரிப்புக்கு அடிப்படையாய் இருந்து, தேவனுக்கு மனமுவந்து கீழ்ப்படிகிறவர்கள் அனைவருக்கும் இணக்கம் ஏற்படுத்துகிறது என்றும், ஆயினும் அந்தப் பணியானது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அவர்கள் புரிந்திருக்க வேண்டும். அந்த வேலை அவரது ராஜ்யத்தின் ஆளுகையின்போது, ஆயிரவருட அரசாட்சியில் அவரால் நிறைவேற்றப்படஇருக்கிறது. (4) அவர் தற்போது இராஜ்ஜிய வகுப்பாருக்கான அங்கத்தினர்களை தேடிக் கொண்டிருக்கிறார் என்றும், அங்கத்தினராவதற்கான அந்த வழி நெருக்கமான வழி என்றும் அறிவிக்கிற கர்த்தருடைய செய்தியை அவர்கள் கேட்கவேண்டும். ‘‘ஒருவன் எனக்கு சீஷனாயிருக்க விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் சீஷனும் இருப்பான். இந்த வகுப்பாருக்கான பரீட்சை மிகுந்த உபத்திரவங்களின்மூலம் இருக்கிறது என்பதை அவர்கள் உணரவேண்டும். அதாவது, தேவன் பரிசுத்தவான்களை மாத்திரம் அழைக்கவில்லை, மாறாக யாருடைய பரிசுத்தத்துவம், மரணபரியந்தமான தங்கள்

உண்மைத்தன்மையை தேவனுக்காகவும் சகோதரர்களுக்காகவும், தங்கள் அன்பைக் குறித்த அக்கினி போன்ற சோதனைகள் பரீட்சைகளை சகிக்கிறதோ அவர்களை அழைக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரராக, நீதியின் ஊழியத்தில் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருக்க தங்கள் முழு அர்ப்பணிப்பை ஏற்படுத்திய நேரத்திலிருந்து, மதிப்புள்ள வேறு எல்லாவற்றோடு ஒப்பிடுகையில், பரலோக இராஜ்ஜியத்தை அவர்கள் மிக உயர்ந்த பொக்கிஷமாகக் கருதுவார்கள். அவர்கள் அனுதினமும், ஒவ்வொரு மணிநேரமும் அதைத் தேடுவார்கள். அவர்களுடைய இருதயம் அங்கே .. அந்த பொக்கிஷத்துடனே இருக்கும். இது பகலிலே அவர்களுடைய சிந்தனைகளின் கருப்பொருளாகவும், இரவிலே அவர்களுடைய தியானங்களாகவும் இருக்கும். தேவையான நேர்மையான காரியங்களை வழங்கும் நோக்கத்திற்காக, பூமிக்குரிய தொழில்கள் இன்னும் அவர்களுக்கு அவசியமாயிருக்கும். ஆனால் அவர்களுடைய மதிப்பீட்டில், பரலோக பரிசோடு ஒப்பிடுகையில், எந்த பூமிக்குரிய பரிசுகளுக்கும் எவ்வித மதிப்பும் இல்லை. அப்படிப்பட்டவர்களே, வீடுகள் அல்லது சொத்துக்கள், பெற்றோர்கள் அல்லது குழந்தைகள் அல்லது சுயம் ஆகியவற்றை நேசிப்பதைவிட, தேவனை அதிகமாக நேசிக்கிறவர்களுக்கு அவர் வாக்களித்திருக்கிற இராஜ்ஜியத்தின் வெற்றிகரமான வாரிசுகளாக இருப்பார்கள்.

——————————————